# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

8075268

C

1. District மாவட்டம் : திருவாரூர் PS: காவல்நிலையம் V&AC Year ஆண்டு 2021 FIR No. மு.த.அ. எண் 07/2021 Date நாள் 28.6.2021

2. (i) Act சட்டம்: U/s. 7 of Prevention Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: of Corruption Act Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: 1988 as amended 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை First demand on 23.6.2021 16.00 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை II demand on 24.6.2021 16.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் : Complainant arrived at V&AC office 28.6.2021 14.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : FIR - 28.06.21 18.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 32 km S.W
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி நேரடி நெல் கொள்முதல் நிலையம் எட. மேலையூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. மணிமொழியன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 63/21 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் 2 நம்பர் மேலத்தெரு, எடமேலையூர்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி நீடாமங்கலம் தாலுக்கா திருவாரூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. முருகன், பட்டியல் எழுத்தர், நேரடி நெல் கொள்முதல் நிலையம், எடமேலையூர்
   2) திரு. கோவிந்தராஜ், மேஸ்திரி, நேரடி நெல் கொள்முதல் நிலையம் எடமேலையூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி. G.R.சித்ரா ஆகிய நான் 28.06.2021ந் தேதி 14.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.A.மணிமொழியன், என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் A.மணிமொழியன், த/பெ.ஆறுமுகம், தெற்கு மேலத்தெரு, எடமேலையூர், நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் எனது குடும்பத்துடன் எடைமேலையூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் 7வது வரை படித்துள்ளேன். நான் நான்கு ஏக்கர் நிலத்தில் குத்துகைக்கு விவசாயம் செய்து வருகிறேன். கோடை சாகுபடியில் ஒரு மாதும் முன்பு அறுவடை செய்த நெல்லில், எடைமேலையூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் 180 சிப்பம் நெல் போட்டேன். அப்போதே பட்டியல் எழுத்தர் முருகன் மற்றும் மூட்டை தூக்குபவர்களின் மேஸ்திரி கோவிந்தராஜ் ஆகியோன் ஒரு சிப்பத்திற்கு 30 ருபாய் என பணம் கேட்டார்கள். ஆனால் நான் கொடுக்கவில்லை. கடந்த 7.06.2021ந் தேதி அறுவடை செய்த நெல்லை டிப்பரில் 7 முறை எடுத்துக்கொண்டுபோய் மேற்படி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் கிழக்கில் கொட்டி வைத்துள்ளேன். இது தோராயமாக

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Manimozhiyan
28-6-21

Chitra 28.6.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ............ G.R. CHITRA
Rank: நிலை ............ Inspector of Police VAC TVR No. எண்

250 சிப்பம் நெல் ஆகும். அன்றைய தினமே நெல் பிடிப்பதற்கு நிலையத்தில் பதிவும் செய்துள்ளேன். அங்கேயே கொட்டி இதுவரை 4, 5 முறை காயவைத்துள்ளேன். 100 முட்டைகளுக்கு குறைவாக வைத்திருப்பவர்களே முன்னுரிமை கொடுத்து பிடித்ததால் எனக்கு நெல் பிடிக்க லேட் ஆகும் என்றார்கள், அதற்கும் நான் ஒப்புக்கொண்டேன். கடந்த வாரம் புதன் கிழமை மாலை 4 மணியளவில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் பிடிப்பது சம்மந்தமாக பட்டியல் எழுத்தர் முருகனை பார்த்தபோது அவர் என்னிடம் எவ்வளவு நெல் இருக்கிறது என்று கேட்டார். நான் 250 சிப்பத்திற்கு நெல் உள்ளது என்று கூறினேன். அவர் ஒரு சிப்பத்திற்கு ரூபாய் 30 வீதம் பணம் தரவேண்டும் என்றும், ஆனால் ஏற்கனவே நெல் கொள்முதல் செய்த போது நீங்கள் பணம் தராமல் ஏமாற்றிவிட்டீர்கள். எனக்கு இல்லை என்றாலும் பரவாயில்லை மேஸ்திரிக்கு பணம் கொடுத்துதான் ஆக வேண்டும். அதனால் பழைய பாக்கியை செட்டில் பண்ணினால்தான் இந்த நெல்லை எடும்போம், மேஸ்திரிக்கு பணத்தை செட்டில் பண்ணுங்கள் என்று சொன்னார். நான் எவ்வளவு பணம் என்று கேட்டேன். அதற்கு மேஸ்திரி இப்போது இல்லை நீங்கள் நாளை மாலை வாருங்கள், மேஸ்திரியிடம் பேசிய பிறகுதான் உங்கள் நெல்லை எடுப்பது சம்மந்தமாக சொல்ல முடியும் என்று கூறிவிட்டார். அதனால் மறுநாள் வியாழக்கிழமை 24.06.2021ந் தேதி மாலை 4 மணியளாவில் மேற்படி நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்றேன். பட்டியல் எழுத்தர் அவரது அறையில் இருநதார். அவரும் இரவு காவலரும், நெல் பிடிக்க நாங்கள் சாக்கு தருகிறோம். ஆனால் மேஸ்திரியிடம் பணம் சம்மந்தமாக பேசிவிட்டு வந்தால்தான் நெல் எடுப்போம் என்று சொல்லிவிட்டார்கள். அதனால் அட்டி அடுக்கும் இடத்தில் நின்ற மேஸ்திரி கோவிந்தராஜை பார்த்தேன். அவர் ஏற்கனவே பிடித்த நெல்லுக்கு ரூ.3200/- அவரிடம் கொடுக்க வேண்டும் என்றும், இப்போது பிடிக்கும் நெல்லுக்குரிய பணத்தை பட்டியல் எழுத்தரிடம் கொடுத்துவிட வேண்டும் என்று சொன்னார். நான் அதற்கு சரி என்று சொல்லிவிட்டு திரும்பவும் பட்டியல் எழுத்தரை சென்று பார்த்தேன். மேஸ்திரிக்குரிய பணத்தை அவருக்கு தருவதாக நான் சொல்லிவிட்டதால் நெல் பிடிப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்றும், இப்போது பிடிக்கும் நெல்லுக்கு உரிய பணத்தை உங்களிடம் கொடுக்க சொன்னார் என்று கூறினேன். மேலும் ஒரு சிப்பத்திற்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டேன். அதற்கு அவர் ஒரு சிப்பத்திறகு ரூ 30 என கூறினார். மேலும் இப்போது பிடிக்கும் நெல்லுக்குரிய பணத்தை அவரிடம் கொடுக்கு வேண்டும் என்றும், அந்த பணத்தை அவர் வாங்கிக்கொள்வார் என்றும், தற்போது பிரச்சனை இல்லை என்றும், உங்களுக்கு சனிக்கிழமை அல்லது திங்கள் கிழமை நெல் பிடிக்கலாம் என்று கூறினரார். அதற்கு நான் சரி என்று கூறிவிட்டு, எனக்கு கூலி ஆள் கிடைத்த உடன் நெல் போட வருகிறேன் என்று கூறிவிட்டு வந்தேன். இது நடவு நேரம் என்பதால் நெல் அள்ளிபோட கூலிக்கு ஆள் கிடைப்பது சிரமமாக இருந்தது. நாளை 29.06.2021ந் தேதி செவ்வாய் கிழமை காலை கூலி ஆள்கள் வருவதாக உள்ளதால் நாளை காலைதான் நெல் போடப்போகிறேன். அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல்லை கொள்முதல் செய்வதற்கு என்னிடம் கையூட்டு பணம் ரூ.3,200/- கேட்ட மேஸ்திரி கோவிந்தராஜ் மற்றும் என்னிடம் உள்ள 250 சிப்பம் நெல்லுக்கு ரூ 30 வீதம் கையூட்டு பணம் கேட்ட பட்டியல் எழுத்தர் முருகன் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேஸ்திரி கோவிந்தராஜ் கேட்ட ரூ 3200/- மற்றும் பட்டியல் எழுத்தர் 250 சிப்பத்திற்கு ரூ 30 வீதம் கேட்ட ரூ 7,500/- ஆகியவற்றை கொண்டுவந்துள்ளேன். மேலும் 24.06.2021-ந் தேதி மாலை எடைமேலையூர் நேரடி நெல்

கொள்முதல் நிலையத்தில் நான் பட்டியல் எழுத்தர் முருகன் மற்றும் மேஸ்திரி கோவிந்தராஜ் ஆகியோரை சந்தித்த போது, அவர்கள் என்னிடம் கையூட்டு கேட்டது சம்மந்தமான உரையாடல்களை எனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்துள்ளேன். அந்த செல்போனை எனது பேத்தி ஆன்லைன் வகுப்புக்காக உபயோகிப்பதால் என்னால் தற்போது எடுத்துவர இயலவில்லை. ஆனால் அந்த வீடியோவை CDயில் பதிவு செய்து எடுத்துவந்துள்ளேன். எனது மனு மீது நடிவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd (xxxxxxxxxxx 28-6-21) அய்யா மேற்படி புகாரை 14.00 மணியளவில் பெற்றும், முதல் விசாரணை செய்தும் இந்த புகார் மீது 18.00 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண் 07/2021 ச/பி 7 of PC Act 1988 as amended 2018 ன் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. Sd (XXXXXX) 28.6.2021 Inspector of Police, V&AC, TVR.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

Gllle 28/6/2021
[G.R.CHITRA]
Inspector of Police
V&AC TVR